# இஸ்லாமியர்களின் கல்வி வளர்ச்சியில் மத்ரஸாக்களின் பங்களிப்பு – அநுராதபுர மாவட்டத்தை அடிப்படையாகக்கொண்டது.

**செல்வி நூர் மொஹமட் பாத்திமா றிபானா, அருந்தவராஜா,க.**
வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
**rifananoori97@gmail.com**

*இலங்கையில் இஸ்லாமியர்களின் வரலாறானது நீண்டகாலத்தினைக் கொண்டுள்ளது. இவர்கள் தமது சமூக, கலாசார மற்றும் கல்வி நிலை வளர்ச்சிக்கு தங்களுக்கெனச் சொந்தமான நிறுவனங்களினை உருவாக்கியுள்ளனர். மார்க்கத்தைப் பற்றிய நுண்ணறிவும், போதனையும், பயிற்சியும் மற்றும் உலகக்கல்வியினையும் வழங்கும் தளமாக மத்ரஸா எனும் ஸ்தாபனமானது உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கை இஸ்லாமியர்கள் இஸ்லாத்தின்மீது கொண்டிருந்த பற்றும், தமது கலாசாரத் தனித்துவத்தைப் பாதுகாப்பதற்குச் சமயத்தைப் பேணுவதே ஒரே வழி என்று அவர்கள் சிந்தித்தமையும் அவர்களிடையே இம் மத்ரஸாக்கள் செல்வாக்குப் பெறக் காரணமாகியதெனலாம். இலங்கையில் மத்ரஸாக்களின் தோற்றத்துக்கு இந்தியாவில் காணப்பட்ட மத்ரஸாக்கள் பாரிய தாக்கம் செலுத்தியுள்ளன. முஸ்லிம்களின் ஆதிக்குடியேற்றத்திலிருந்து இந்தியாவுக்கும், இலங்கைக்குமிடையே நிலவிய கலாசார உறவுகளையும், வர்த்தகத் தொடர்புகளையும் வரலாற்றுப் பின்னணியையும் நோக்கும்போது இதனை அறியலாம். இலங்கையில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மத்ரஸாக்களின் எழுச்சி ஏற்பட்டது. இதற்கு முன்னர் முறைப்படுத்தப்பட்ட பாடப்போதனைகளும், நிர்வாக அமைப்புக்களும் காணப்படவில்லை. இவ்வாறு இருக்க இலங்கை வரலாற்றில் முதல் மத்ரஸாக் கல்வி நிலையமாக “மத்ரசத்துல் பாரியே” உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கையில் முஸ்லிம்கள் அதிகமாக வாழும் எல்லா நகரங்கள், கிராமங்களிலும் இவை தோற்றம்பெற்று முஸ்லிம் சமய, கலாசாரத் திணைக்களத்தில் அவை பதிவு செய்யப்பட்டு, அரச அங்கிகாரம் பெற்ற மத்ரஸாக்களாக இன்று வரை தமது பணியைத் தொடர்ந்து வருகின்றன. இதுவரை இலங்கையில் 250 மத்ரஸாக்கள் முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் 400இற்கும் அதிகமான மத்ரஸாக்கள் இருப்பதாக கணிப்பிடப்பட்டுள்ளது. அநுராதபுர மாவட்டத்தில் மத்ரஸா என்ற அமைப்பானது ஆரம்பத்தில் காணப்படவில்லை. நல்லதோர் இஸ்லாமிய சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற எண்ணப் பாங்கின் விளைவாக 1995 இல் முதல் மத்ரஸாவான ஜமாலியா ஆண்கள் மத்ரஸா உருவாக்கப்பட்டது. தொடர்ந்து தற்காலம் வரை அநுராதபுர முஸ்லிம் மாணவர்களிடையே ஏற்பட்ட கல்வி வளர்ச்சியின் தாக்கத்தால் சுமார் 15க்கும் மேற்பட்ட மத்ரஸாக்கள் அங்கே தோன்றி வளர்ந்து வந்துள்ளமை அவதானிக்கத்தக்கது. அநுராதபுர மாவட்ட இஸ்லாமியர்களின் கல்வி வளர்ச்சியில் மத்ரஸாக்களின் பங்கானது பிரதான இடத்தைப் பெறுகின்றது. மத்ரஸாக்கல்வி முறையினை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதற்குப் பங்காற்றியவர்களின் சேவைகளும் போற்றத்தக்க ஒன்றாக*